# "பெண்களின் ஓர் புரட்சி"

**முன்னுரை:**

பெண் என்ற தாய்மையில் இருந்து தான் இந்த உலகின் உயிர்கள் அனைத்தும் தோன்றுகின்றன. ஒரு வெற்றிகரமான சமூகம் உருவாகுவதற்கு பெண்கள் மிகமுக்கியமான பங்களிப்பை வழங்கி வருகின்றனர். குழந்தைகளைப் பெற்று வளர்த்து அவர்களை ஆளாக்கி குடும்பத்தை நிர்வகிப்பவர்கள் பெண்களே. பெண்கள் அசாத்தியமான மனவலிமையும் பொறுமையும் உடையவர்களாக இருப்பார்கள். ஒவ்வொரு ஆண்களின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண்ணின் தியாகங்கள் நிறைந்திருக்கும் பெண்களின் முக்கியத்துவமும் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பார்ப்போம்.

**வாழ்வியலில் பெண்களின் பங்கு:**

ஒரு பெண் சமூகத்தில் பல வேடங்கள் எடுக்கின்றாள். குழந்தைகளுக்கு தாயாகவும் கணவனுக்கு மனைவியாகவும் பெற்றோருக்கு நல்ல மகளாகவும் சகோதரர்களுக்கு அன்பான சகோதரியாகவும் மாணவர்களுக்கு அன்பான ஆசிரியையாகவும் மருத்துவர்களாகவும் பல துறைகளிலும் வாழ்வின் அனைத்து துன்பமான நேரங்களிலும் ஆண்களுக்கு துணையாக பெண்கள் உள்ளனர். ''பெண்ணில்லா ஊரில் பிறந்தவர்கள் அன்பின் இலக்கணம் அறியாதவர்களாக'' தமிழ் இலக்கியங்களில் கூறப்படுகிறது.

**பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள்:**

பெண்கள் பிறப்பின் அடிப்படையில் உடல் அளவில் மென்மையானவர்கள் எமது சமூகத்தில் ஆரம்பகாலங்களில் இருந்தே பெண்களை விட ஆண் பலமானவன் உயர்ந்தவன் என்ற ஆணாதிக்க கோட்பாடு ஒன்று உள்ளது. பெண்ணடிமைத்தனம், சீதனம், கட்டாய திருமணம் இவை போன்ற செயல்கள் இந்த மடமைத்தனத்திற்கு வித்திட்டது. பெண்கள் கல்வி கற்க சுதந்திரமாக அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களது கனவுகளை யாரும் அங்கீகரிப்பதில்லை பெண் வளர்ந்தால் அவளை திருமணம் செய்து வைப்பதே தமது கடமை எனும் சிந்தனை பெற்றோர்கள் மனதில் உள்ளது. இதனால் தான் பெண்கள் தமது கனவுகளை பெற்றோருக்காக சிதைத்து கொள்கின்றனர். பெண்களுக்கான சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்பது தொடர்பான போராட்டம் தமிழ் வரலாற்றில் மகாகவி வரிகளால் விதை போடப்பட்டது. **"ஓடி விளையாடு பாப்பா - நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா,** என்று கூறினார். பெண்கள் எல்லா துறைகளிலும் சிறப்பான வளர்ச்சி காண்பது இந்த சமூகத்திற்கு கிடைத்த வெற்றியாகும் . இன்றைக்கு நாம் எதிர்பார்க்கின்ற பாலின் சமத்துவம் எமது தேசங்களில் மெல்ல மெல்ல உருவாக ஆரம்பித்திருக்கின்றன.

**பெண்களுக்கான பாதுகாப்பு:**

பெண்களுக்கெதிரான வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும். இன்றைய சமூகத்தில் போதை பழக்கத்திற்கு அடிமையாகின்றவர்கள் அதிகமாக இருப்பதனால் பெண்களுக்கான பாதுகாப்பு குறைவடைய மறைமுகமான காரணமாக உள்ளது.

**பெண்களுக்கான முன்னேற்றமும் சமூகவளர்ச்சியும்:**

பெண்கள் முன்னேற்றப் பாதையில் வந்து கல்வியல் வளர்ச்சி பெறுவதால் சமூகத்தில் இடம்பெறும் குற்றங்களை எதிர்த்து கேள்வி கேட்கும் அதிகாரம் பெறுவதனால் சமூக குற்றங்கள் தடுக்கப்பட்டு அந்த சமூதாயமும் வெற்றிகரமாக அமையும் முன்பெல்லாம் ஆண்கள் மட்டுமே சம்பாதித்தனர் ஆனால் இன்று பெண்களும் சமனாக வருமானம் ஈட்டுவதனால் பொருளாதாரம் மற்றும் உழைப்பாளர் தொகை என்பன உயர்வடைகிறது. இது ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் மேம்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

**முடிவுரை:**

உலகத்தின் தலைசிறந்த நாடுகள் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தேவைகள் மற்றும் வளவாய்ப்புகள் சுதந்திரம், பாதுகாப்பு என்பன தொடர்பாக அதிகம் கவனம் எடுக்கின்றன. இந்த நாடுகளின் வளர்ச்சியால் பெண்கள் பெரும்பங்காற்றுகின்றனர்.உலகளவில் நாடுகளினுடைய அரசியல் தலைவர்களாகவும் நிர்வாக தலைவர்களாகவும் மாறியிருக்கின்றனர்.

**" எங்கும் சுதந்திரம்**
**என்பதே பேச்சு , நாம்**
**எல்லோரும் சமம்**
**என்பது உறுதியாச்சு"**

என்று சொல்லி கட்டுரையை நிறைவு செய்கிறேன்.